FROM THE DAILY THANTHI GROUP
DT NEXT
OUR NEIGHBOURHOOD, OUR NEWSROOM

# White revolution in newborn care: JIPMER nursing team doubles donor milk collection

*According to the statement issued by JIPMER, the institute handles nearly 1,000 deliveries every month, including high-risk referrals from Puducherry and neighbouring districts of Tamil Nadu.*

DTNEXT Bureau
Updated on: 13 Feb 2026, 11:12 am



**CHENNAI:** The nursing team at the Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (JIPMER), Puducherry has doubled daily donor milk collection at its human milk bank following the rollout of a structured, round-the-clock breastfeeding counselling programme.

According to the statement issued by JIPMER, the institute handles nearly 1,000 deliveries every month, including high-risk referrals from Puducherry and neighbouring districts of Tamil Nadu. With a Level III Neonatal Intensive Care Unit (NICU) caring for critically ill and preterm infants, timely access to mother's milk remains central to survival and recovery.

Recognising the need for systematic lactation support, the Nursing department initiated an intensive training programme based on the Breastfeeding Promotion Network of India curriculum, supported by the Trained Nurses Association of India, Puducherry branch. Thirty-five nurses underwent focused training in breastfeeding counselling and postnatal lactation management and are now deployed across all wards of the Women and Children's Hospital, ensuring 24/7 guidance on positioning, attachment and early initiation of feeding.

As a direct outcome of the initiative, daily donor milk collection at "Amutham Thaipaal Maiyam", JIPMER's human milk bank, has doubled, significantly expanding support for vulnerable neonates in the NICU.

Director Dr. Vir Singh Negi described the initiative as a true white revolution within the institution, stating that empowered nursing leadership can deliver measurable improvements in patient outcomes.

Professor of Neonatology Dr. Adhisivam, who led the initiative, said structured training, continuous monitoring and multidisciplinary coordination were key to its success. He reaffirmed the department's commitment to promoting exclusive breastfeeding and further strengthening lactation services.

The programme complements ongoing quality measures, including improved first golden hour care, skin-to-skin contact, optimised feeding strategies for preterm infants and respectful maternity care.

Link: https://www.dtnext.in/news/tamilnadu/white-revolution-in-newborn-care-jipmer-nursing-team-doubles-donor-milk-collection

தினகரன்
பிப்ரவரி 14, 2026 சனிக்கிழமை

# தாய்ப்பால் தானம் இரட்டிப்பாக உயர்வு

## செவிலியர் குழுவுக்கு இயக்குநர் பாராட்டு



**புதுச்சேரி, பிப். 14:** புதுச்சேரி மற்றும் தமிழ்நாடு மாவட்டங்களிலிருந்து மிகவும் சிக்கலான மகப்பேறு சிகிச்சை தேவைப்படும் கர்ப்பிணிகள் பரிந்துரையாக அனுப்பப்படுகின்றனர். அதனை தொடர்ந்து பிறக்கும் பச்சிளம் குழந்தைகளுக்கென ஜிப்மரில் நவீன வசதிகளுடன் கூடிய தேசிய தரம் வாய்ந்த பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு (NICU) இயங்கி வருகிறது. இந்நிலையில் அவசர மற்றும் பேறு காலத்துக்கு முன்பாகவே பிறக்கும் குழந்தைகளுக்கான சரியான மற்றும் காலதாமதமற்ற தாய்ப்பால் ஊட்டச்சத்து வழங்குதல் மிக முக்கியமானதாக இருந்து வருகிறது.

இந்நிலையில் ஜிப்மரின் அமுதம் தாய்ப்பால் மையத்தில் தினமும் பெறும் தாய்ப்பாலின் தான அளவு தற்போது இரட்டிப்பாக உயர்ந்துள்ளது. மகளிர் மற்றும் குழந்தைகள் பிரிவு செவிலியர் கண்காணிப்பாளர் ஜேன் மேரி ஆண்ட்ரூ தலைமையிலான செவிலியர் குழு, இந்த முயற்சியை வடிவமைத்து, ஒருங்கிணைத்து. நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்த திட்டம் குழந்தைகளுக்கான நடைமுறை சிகிச்சை அமைப்பில் தவிர்க்க முடியாத அங்கமாக ஒருங்கிணைக்கப்பட்டு செயல்வடிவம் பெற்றுள்ளது. இந்த செவிலியர் குழுவை ஜிப்மர் இயக்குநர் வீர் சிங் நேகி பாராட்டினார்.

தினத்தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்
14.2.2026 (சனிக்கிழமை)

# ஜிப்மர் தாய்ப்பால் மையத்தில் தானம் இருமடங்கு அதிகரிப்பு

புதுச்சேரி, பிப்.14-

ஜிப்மர் அமுதம் தாய்ப் பால் மையத்தில் தானம் இரு மடங்கு அதிகரித்துள் ளது.

## தாய்ப்பால் வங்கி

புதுவை கோரிமேடு ஜிப்மர் ஆஸ்பத்திரியில் மாதந்தோறும் சுமார் 1,000 பிரசவங்கள் நடை பெறுகின்றன. பச்சிளம் குழந் தைகளுக்கு என நவீன வசதிக ளுடன் கூடிய தேசிய தரம் வாய்ந்த பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு இயங்கி வருகிறது. இது அவசர மற்றும் பேறு காலத்திற்கு முன் பிறக் கும் குழந்தைகளுக்கான சரி யான, காலதாமத மற்ற தாய்ப் பால் ஊட்டச்சத்து வழங்குதல் மிக முக்கியமானதாக இருந்து வருகிறது.

அதன்படி ஜிப்மரில் தாய்ப் பால் ஊக்குவிப்பு மற்றும் அமு தம் தாய்ப்பால் வங்கி சேவை செயல்பட்டு வருகிறது. இதன் மூலமாக தாய் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கான சிகிச்சை தரத்தை உயர்த்தி உள்ளது.

இந்த நிலையில் இந்திய பயிற்சி பெற்ற செவிலியர்கள் சங்க புதுவை கிளை ஆதரவு டன் பாலூட்டுதல் ஆலோசகர் கள் பயிற்சி திட்டம் வடிவமைக் கப்பட்டு உள்ளது. இதில் 35 செவிலியர்கள் பயிற்சி பெற்ற னர்.

## இரு மடங்கு அதிகரிப்பு

அவர்கள் ஜிப்மரில் மகளிர் மற்றும் குழந்தைகள் பிரிவில் அனைத்து உட்புற சிகிச்சை பிரிவிலும் நியமிக்கப்பட்டு 24 மணி நேர தாய்ப்பால் ஆலோ சனை வழங்கி வருகின்றனர். இதன் மூலம் ஜிப்மர் தாய்ப் பால் மையத்தில் தாய் பால் தான அளவு இரட்டிப்பாக உயர்ந்து உள்ளது. இது மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இதன் மூலம் பச்சிளம் குழந் தைகளுக்கான தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயுற்ற மற்றும் பேறு காலத் துக்கு முன் பிறந்த குழந்தைக ளுக்கு சிறந்த ஊட்டசத்தாக தாய்ப்பால் வழங்கப்படுகிறது.

இதற்காக ஜிப்மர் இயக்குனர் வீர்சிங் நேகி, பச்சிளம் குழந்தை கள் மருத்துவ துறை பேராசிரிய ரும், அமுதம் தாய்ப்பால் மைய பிரிவு தலைவருமான டாக்டர் ஆதிசிவம், செவிலியர் மேலா ளர் ஜேன்மேரி ஆண்ட்ரூ தலை மையிலான செவிலியர் குழு வினருக்கு பாராட்டுக்களை தெரிவித்தார்.

நமது முரசு
NAMATHU MURASU
தமிழ் மக்களின் நாடித்துடிப்பு
மாலை நாளிதழ்

## புதுவை ஜிப்மரில் வெண்மை புரட்சி:

# செவிலியர் ஊக்குவிப்பு திட்டத்தால் தாய்ப்பால் தானம் அதிகரிப்பு

**புதுச்சேரி, பிப். 13–** புதுவை ஜிப்மரில் மாதந்தோறும் சுமார் ஆயிரம் பிரசவங்கள் நடக்கிறது.

தமிழகம், புதுவையிலிருந்த சிக்கலான மகப்பேறு சிகிச்சை தேவைப்படும் கர்ப்பிணிகள் ஜிப்மருக்கு பரிந்துரைக்கப்படுகின்றனர். இங்கு நவீன வசதிகளுடன் கூடிய பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவு, அவசர மற்றும் பேறு காலத்துக்கு முன்பாக பிறக்கும்

குழந்தைகளுக்கான சரியான மற்றும் காலதாமதமற்ற தாய்ப்பால் ஊட்டச்சத்து வழங்குதல் மிக முக்கியமானதாக இருந்து வருகிறது.



இந்த அவசியத்தை உணர்ந்து, தாய்ப்பால் ஆலோசனை சேவைகளை வலுப்படுத்தும் பணியை ஜிப்மர் செவிலியர் துறை மேற்கொண்டு வருகிறது. மேலும் 35 செவிலியர்கள் தாய்ப்பால் ஆலோசனை மற்றும் குழந்தை பிறப்புக்கு பிந்தைய பாலூட்டல் தொடர்பாக தீவிர பயிற்சி பெற்றனர்.

இந்த பயிற்சி பெற்ற செவிலியர்கள் ஜிப்மர் குழந்தை பிரிவு உட்பட அனைத்து பிரிவிலும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 24 மணி நேரமும் தாய்ப்பால் வழங்குவதை ஊக்குவிக்கவும், தாய்ப்பால் தானம் வழங்கவும் ஆலோசனைகளை வழங்கினர். இதன் விளைவாக ஜிப்மரில் செயல்பட்டு வரும் அமுதம் தாய்ப்பால் மையத்தில் தினசரி பெறும் தாய்ப்பாலின் தான அளவு இரு மடங்காக உயர்ந்துள்ளது.

ஜிப்மர் மகளிர் மற்றும் குழந்தைகள் பிரிவு செவிலியர் மேலாளர் ஜான்மேரி ஆண்ட்ரூ தலைமையிலான குழுவினரின் இந்த சேவையை ஜிப்மர் இயக்குனர் வீர்சிங்நேகி, பச்சிளம் குழந்தைகள் மருத்துவத் துறை பேராசிரியர் ஆதிசிவம் ஆகியோர் இது ஒரு வெண்மை புரட்சி என பாராட்டியுள்ளனர்.

மாலை மலர்
13-2-2026 (வெள்ளிக்கிழமை)

### புதுவை ஜிப்மரில் வெண்மை புரட்சி

# செவிலியர் ஊக்குவிப்பு திட்டத்தால் தாய்ப்பால் தானம் அதிகரிப்பு

புதுச்சேரி, பிப்.13–

புதுவை ஜிப்மரில் மாதந்தோறும் சுமார் ஆயிரம் பிரசவங்கள் நடக்கிறது. தமிழகம், புதுவையிலிருந்த சிக்கலான மகப்பேறு சிகிச்சை தேவைப்படும் கர்ப்பிணிகள் ஜிப்மருக்கு பரிந்துரைக்கப்படு கின்றனர். இங்கு நவீன வசதிகளுடன் கூடிய பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சைப்பிரிவு, அவசர மற்றும் பேறு காலத்துக்கு முன்பாக பிறக்கும் குழந்தைகளுக்கான சரியான மற்றும் காலதாமதமற்ற தாய்ப்பால் ஊட்டச்சத்து வழங்குதல் மிக முக்கியமானதாக இருந்து வருகிறது.

இந்த அவசியத்தை உணர்ந்து, தாய்ப்பால் ஆலோசனை சேவைகளை வலுப்படுத்தும் பணியை ஜிப்மர் செவிலியர் துறை மேற்கொண்டு வருகிறது. மேலும் 35 செவிலியர்கள் தாய்ப்பால் ஆலோசனை மற்றும் குழந்தை பிறப்புக்கு பிந்தைய பாலூட்டல் தொடர்பாக தீவிர பயிற்சி பெற்றனர். இந்த பயிற்சி பெற்ற செவிலியர்கள் ஜிப்மர் குழந்தை பிரிவு உட்பட அனைத்து பிரிவிலும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 24 மணி நேரமும் தாய்ப்பால் வழங்குவதை ஊக்குவிக்கவும், தாய்ப்பால் தானம் வழங்கவும் ஆலோசனைகளை வழங்கினர். இதன் விளைவாக ஜிப்மரில் செயல்பட்டு வரும் அமுதம் தாய்ப்பால் மையத்தில் தினசரி பெறும் தாய்ப்பாலின் தான அளவு இரு மடங்காக உயர்ந்துள்ளது. ஜிப்மர் மகளிர் மற்றும் குழந்தைகள் பிரிவு செவிலியர் மேலாளர் ஜேன்மேரி ஆண்ட்ரூ தலைமையிலான குழுவினரின் இந்த சேவையை ஜிப்மர் இயக்குனர் வீர்சிங்நேகி, பச்சிளம் குழந்தைகள் மருத்துவத் துறை பேராசிரியர் ஆதிசிவம் ஆகியோர் இது ஒரு வெண்மை புரட்சி என பாராட்டியுள்ளனர்.